**O.S. No. 20/2017**

**Date: 10.10.2025**

**வா.சா.1. கனகம்மாள்**

**2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு கனகவேல் என்ற ஒரு பெயரும் உண்டு. இந்த வழக்கை நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து பிரிப்பது சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு பங்கை கேட்டுள்ளேன் என்றால் 50 செண்டில் எனது பங்கை கேட்டுள்ளேன். எவ்வளவு பங்கு என்றால் 4 பங்கு ஆகும். எனக்காகவும் எனது தாயார் 1ம் வாதி சகோதரிகள் 2, 3 வாதிகளுக்காவும் சாட்சி சொல்கிறேன். வழக்கு சொத்துக்கள் பற்றி வழக்கறிஞருக்கு யார் விவரம் கூறினார்கள் என்றால் நான் தான் சொன்னேன். நான் படிக்கவில்லை. எனது சகோதரிகள் யாரும் படிக்கவில்லை. எனது அப்பா பெயர் சன்னாசி. எனது அப்பாவிற்கு 2 மனைவிகள். முதல் மனைவி பெயர் பெத்தம்மாள். 2வது மனைவி பெயர் லெட்சுமிஅம்மாள். லெட்சுமி அம்மாள் இந்த வழக்கின் 1ம் வாதி. பெத்தம்மாளுக்கு மொத்தம் 3 மக்கள். குருவம்மாள், பெரிய சன்னாசி, சின்ன சன்னாசி. 2 முதல் 4 வாதிகள் 1ம் வாதியின் மக்கள். எனது அம்மாவிற்கு திருமணமாகி எத்தனை வருடம் ஆகிறது என்பது என்பது எனக்கு தெரியாது. பெத்தம்மா இறந்த பின்பு தான் எனது அம்மாவை எனது அப்பா திருமணம் செய்தார். நானும் 2, 3ம் வாதிகளும் திருமணம் செய்து தனித் தனியாக வாழ்ந்து வருகிறோம். என்னை அரியூரில் கல்யாணம் செய்து கொடுத்து நான் தற்போது சிவகிரியில் வாழ்ந்து வருகிறேன். 3ம் வாதி சேத்தூரில் திருமணமாகி தற்போது சிவகிரியில் வசித்து வருகிறார். 2ம் வாதி திருமணாகி சிவகிரியில் தான் வசித்து வருகிறார். எனது தகப்பானரின் அப்பா பெயர் கருப்பணத்தேவர். பிராது தபசு சொத்துக்கள் ஆதியில் இருந்து கருப்பணத்தேவருக்கும் பெத்தம்மாளுக்கும் பாத்தியப்பட்டது. பிராதில் பெத்தம்மாவிற்கு சொத்தில் பாத்தியப்பட்டது என்று நான் எனது வழக்கில் சொல்லியுள்ளனா என்றால் தெரியாது. எனது

தாத்தாவிற்கு மொத்தம் 3 மக்கள். வெள்ளையம்மாள், தலக்கம்மாள், சன்னாசி. தலக்கமாளும், வெள்ளையம்மாளும் சொத்தில் உள்ள உரிமையை சன்னாசிக்கு வாய்மொழியாக கொடுத்து விட்டார்கள். எனது தாத்தா, பாட்டி எப்போது இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தாத்தாவிற்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்னென்ன உள்ளது என்றால் வயற்காடு 10 ஏக்கர், காலிமனை 50 செண்ட், 3 வீடு உள்ளது. மேற்படி சொத்து எங்கள் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிராது தபசில் சொத்து பொது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 01.09.1984 தேதியில் சன்னாசியும் பெரிய சன்னாசியும், சின்னசன்னாசியும் மூவரும் 10 ஏக்கர் 14 செண்டை பொறுத்து ஒரு பதிவு பாகப் பிரிவினை ஆவணம் பிறப்பித்துக் கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. 13.10.2004 தேதியில் சின்ன சன்னாசிக்கு எனது அப்பா சன்னாசிக்கு பாகம் மூலம் கிடைத்த சொத்தில் எனக்குரிய பங்கு 1 ஏக்கர் 12 செண்டை பொறுத்து கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தில் 01.09.1984 தேதியில் பாகப் பிரிவினை ஆவணம் மூலம் எனது அப்பாவிற்கு கிடைத்ததாக கூறுவது சரிதான். **01.09.1984 தேதியில் பாகப் பிரிவினை ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.10.2004 சின்ன சன்னாசிக்கு 4ம் வாதி எழுதி கொடுத்த கிரய ஆவணம் பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 13.10.2004 தேதியில் 2ம் வாதி கருப்பாயி தனக்காகவும் தனது மைனர் மக்கள் மூனிஸ்வரி, மாரியப்பன், வேல்முருகன், ஆகியோர்களுக்கு காப்பாளராக 1 ஏக்கர் 12 1/2 செண்டை சின்ன சன்னாசிக்கு கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 3ம் வாதி பெத்தம்மாள் 03.04.2013 தேதியில் தனக்காகவும் தனது மைனர் மக்கள் கற்பகசெல்வி, நச்சாடலிங்கம் ஆகியோர்களுக்கு காப்பாளராக 1 ஏக்கர் 12 செண்டை சின்ன சன்னாசியின்

குமாரர் முருகனுக்கு கிரயம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 01.09.1984 தேதிய பாகம் ஆவணத்திற்கு பின்பு அவரவர்களுக்கு கிடைத்த சொத்தை தனித் தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. 01.09.1984 தேதிய பாக ஆவணத்தில் பிராது தபசின் சொத்துக்கள் சொல்லப்படவில்லை என்பது எனது பங்கை கிரயம் கொடுத்த காலத்திலேயே தெரியும் என்றால் சரிதான். 14.04.2004 தேதியில் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் கணவர் சின்னசன்னாசியும் பாகப் பிரிவினை செய்தது எனக்கு தெரியாது. பிராது தபசின் சொத்தை எனது தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் கணவர் சின்னசன்னாசிக்கு வாய் மொழியாக ஒதுக்கியுள்ளார் என்றால் சரியல்ல. 01.06.1988 தேதியில் 1ம் வாதி தனக்காகவும் 2,3, வாதிகளுக்கும் எனக்காகவும் காப்பாளராக பெரியசன்னாசி, சின்னசன்னாசிக்கும் ரூ. 10 ஆயிரம் வாங்கி கொண்டு பூர்விக சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட விடுதலை ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதியும் சின்னசன்னாசியும் 14.04.2004 தேதியில் பிராது தபசு சொத்தை பொறுத்து பாகம் ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. மேற்படி ஆவணம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 15 வருடத்திற்கு முன்னரே தெரியும். பாகப் பிரிவினை செய்தது 15 வருடத்திற்கு முன்னரே தெரிந்தும் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல 2004 பாகப் பிரிவினை ஆவணத்திற்கு பின்பு பெரிய சன்னாசியும் , சின்னசன்னாசியும் அவரவர்களுக்கு கிடைத்த சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கிடைத்த சொத்தில் தனித் தனியாக வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வீடு எதுவும் கட்டப்படவில்லை. பிராதில் வீடு கட்ட பணம் கொடுத்துள்ளதாக கூறுவது தவறு என்றால் சரிதான். நாங்கள் பணம் எதுவும் கொடுக்கவில்லை. 01.06.1988 தேதியில் பூர்விக சொத்துக்களில் உள்ள உரிமையை 2ம் பிரதிவாதிக்கும்,

சின்னசன்னாசிக்கும், தனக்காகவும் 2 முதல் 4 வாதிகளுக்கு காப்பாளர் நிலையில் விடுதலை ஆவணம் கொடுத்து விட்டு தற்போது ஆவணத்திற்கு முரணாக கட்சி செய்வதால் ஆவணம் முரண்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை ஆவணத்திற்கு மாறுபட்டு பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் பிராதில் தபசு சொத்துக்களை எந்தக்காலத்திலும் 2 முதல் 7 பிரதிவாதிகளுடன் கூட்டாக அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. பிராது தபசின் சொத்துக்களில் எங்களுக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ எவ்வித பாகமும் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது அக்கா. 1ம் பிரதிவாதிக்கு திருமணாகி விட்டதா என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு முதலில் அவரது தாய்மாமா அம்மையப்பன் என்பவரை திருமணம் செய்து அவர் இறந்த பின்பு 2வதாக பிச்சை என்பவரை திருமணம் செய்து அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் தெரியாது. அவருக்கு எவ்வித குழந்தையும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2 முதல் 7 பிரதிவாதிகளின் பரமாரிப்பில் தான் இருந்தார். 2 வருட காலமாக தான் வாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு அவர் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கு முரணாக கட்சி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பினோம். பிரதிவாதிகள் தரப்பில் உண்மை விவரங்களை கூறி பதில் அறிவிப்பு அனுப்பினார்கள். பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆகும். மேற்படி பிராதில் நான் தபசு சொத்தை 2முதல் 7 பிரதிவாதிகள் பிராது சொத்தை விற்க போவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தபசு சொத்தை விற்க வேண்டிய அவசியமில்லை என்றாலும் அவ்வாறு முயற்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் பிராது தபசின் சொத்தில் குடியிருந்து வருகிறார்கள். பிராது தபசில் உள்ள வீடுகளின் கதவு எண் 45, 46 ஆகும். சர்வே எண் தெரியாது. 4 பக்கம் மால் தெரியுமா என்றால்

தெற்கு பக்கம் அரசு மருத்துவமனை, வடக்கு பக்கம் தெரு உள்ளது. மேற்கு பக்கம் முருகன் கோவில் செல்லும் ரோடு உள்ளது. கிழக்கு பக்கம் வேறு ஆட்கள் வீடு உள்ளது. பிராது சொத்தை தவறாக விவரித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. மால்கல் மற்றும் சர்வே எண்ணும் தவறாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் கூறியுள்ளது போல் பூமியில் சொத்து இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா சன்னாசி எனது அம்மாவை 2 வது திருமணம் செய்து கொண்டதால் எனது தாத்தா கருப்பணத்தேவர் பிராதில் தபசு சொத்துக்களை தனது பேரன்களான பெரிய சன்னாசி, சின்ன சன்னாசிக்கு அவர் உயிருடன் இருந்த போதே ஒதுக்கி விட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சன்னாசியும் ஒத்துக்கொண்டதால் 01.09.1984 தேதி பாகம் ஆவணத்தில் பிராது தபசில் சொத்துக்களில் விவரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எனது தந்தை உயிருடன் இருந்த வரை பெரிய சன்னாசி, சின்ன சன்னாசியிடம் எவ்வித பாகமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 01.09.1984 தேதி பாகம் ஆவணம், 01.06.1988 தேதி விடுதலை ஆவணம், 13.10.2004, 03.04.2013 கிரய ஆவணங்கள் மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியும் சின்ன சன்னாசியும் 14.04.2004 பாகம் ஆவணம் பிறப்பித்த போது நான் மறுபடியும் பிரச்சினை செய்ததால் ஊர் மத்தியஸ்தர்கள் முன்னிலையில் எங்களுக்கு ரூ. 20 ஆயிரம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பணத்தை வைத்து பிராது தபசு சொத்திற்கு 4 வது சந்தில் காலி மனையை கிரயம் வாங்கி அதில் வீடு கட்டி அந்த வீட்டை பிச்சை என்பவருக்கு விற்று விட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தையும் நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 01.09.1984, 14.04.2004 தேதிய பாகம் ஆவணத்திற்கு பின்பு பெரிய சன்னாசி, சின்ன சன்னாசியும் அவரவர்களுக்கு கிடைத்த சொத்தை தனித் தனியாக பட்டா பெற்று தீர்வை முதலீடு செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகளையும் 1ம் பிரதிவாதிகளையும் தவிர்த்த 2 முதல் 7

பிரதிவாதிகள் தபசு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ரூ. 20 ஆயிரம் வாங்கி கொண்டு மேலும் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் கருப்பணத்தேவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்பதால் 2 வது மனைவியான 1ம் வாதிக்கும் 2 முதல் 4 வாதிகளுக்கும் இந்து வாரிசுரிமை சட்டப்படி எவ்வதி பங்கும் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை சன்னாசி உயிருடன் இருந்த போதே அவரது பங்கை பிரித்து தனியாக சென்று விட்டார் என்றாலும் அந்த பங்கு எங்களுக்கு கிடைத்து விட்டது என்றாலும் அதனால் தாவா சொத்துக்களில் பங்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. பிராது தபசு சொத்து கூட்டு அனுபவத்தில் இருப்பது போல் கண்டு நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டண சட்ட பிரிவும் தவறானது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்ய எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள வழக்கு மூலமும் வழக்கிற்காக கற்பனையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மை விவரங்கள் மறைத்து தாக்கல் செய்த இவ்வழக்கும் 2 முதல் 7 பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.